2007 அக்டோபர் 22]

வழங்குவதற்கு துறை நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, பலாப்பழமும் ஆண்டு முழுவதும் கிடைப்பதில்லை. ஆகவே, இப்போது வாக்குறுதியாகக் கொடுத்துவிட்டு, பிறகு பழம் கிடைக்காத நேரத்தில் அதை எங்கே பெறுவது என்பது சிக்கலாக ஆகிவிடும். ஆகவே, இப்போது நடைமுறையில் உள்ள அந்த முறைகளே பின்பற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

27—

அங்கன்வாடி மையம்

***6750—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தெற்கு வள்ளியூர், தெற்குத் தெருவில் அங்கன்வாடி மையம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தெற்கு வள்ளியூர், தெற்குத் தெருவில் வாடகைக் கட்டடத்தில் செயல்படும் குழந்தைகள் மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக இடம் தேர்வு செய்யப்பட்டு கட்டடம் கட்டுவதற்கான வரைபடம் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது குறித்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரிடம் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டு, D.R.D.A. இந்த நிதியாண்டிற்குள் தொகையை

ஒதுக்கீடு செய்வதாக உறுதி அளித்துள்ளார். மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினருக்கு உடனே சொந்தக் கட்டடம் தேவை என்றால் உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதற்கான தொகையை வழங்கலாம் எனத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராதாபுரம் வட்டம், தெற்கு வள்ளியூர், தெற்குத் தெரு என்பது காமராஜர் நகர் என்று அழைக்கப்படுகின்ற அந்த இடத்திற்குப் புதிதாக அங்கன்வாடி மையம் அமைக்கப்படுமா என்பதுதான் கேள்வியே தவிர, கட்டடம் கட்டப்படுமா என்பது கேள்வியேயல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அங்கன்வாடி, ஊருக்குத்தான் அமைப்பார்களே தவிர, தெருவிற்குத் தெரு அமைக்கமாட்டார்கள்.

திரு. மு. அப்பாவு: அது தெருவல்ல. தெற்குத் தெரு என்று அழைக்கப்படுகிறது. பெரிய ஊர். தெற்குத் தெரு என்றால் காமராஜர் நகர் என்று பெயர். ஆகவே, அந்த இடத்திற்குப் புதிதாக அங்கன்வாடி மையம் அமைத்துத் தரப்படுமா என்று கேட்பதோடு, தமிழகத்தில் புதிதாக ஓர் அங்கன்வாடி மையம் அமைக்க வேண்டும் என்றால், அங்கே குழந்தைகள் எத்தனை பேர் இருக்க வேண்டும், மக்கள் தொகை எவ்வளவு இருக்க வேண்டும்; எந்த அடிப்படையில் அது ஒதுக்கப்படுகிறது, அவ்வாறு தமிழ்நாட்டில் இதுவரை எத்தனை மையங்கள் இருக்கின்றன, இன்னும் எத்தனை தகுதியான மையங்கள் உருவாக்குவதற்குத் தகுதியான இடங்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது முதல்வர் அவர்கள் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தவுடன் முதன் முறையாக இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக இன்றைக்கு தமிழகத்தில் மட்டும் 45,729 அங்கன்வாடி குழந்தைகள் மையங்கள் உள்ளன. கடந்த 1½ வருட காலத்தில் மட்டும் 7,200 புதிய குழந்தைகள் மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

2007 அக்டோபர் 22]

கடந்த வாரம்கூட திருநெல்வேலி மாவட்டத்தில் 113 மையங்கள் தொடங்கப்பட்டு உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: *கண்டிப்பாக 25 குழந்தைகள் இருந்தால், 3 கிலோ மீட்டருக்குள் பெரிய அங்கன்வாடி குழந்தைகள் மையங்களும், ஒரு மையிலுக்குள் 5 குழந்தைகள் இருந்தால்கூட குழந்தைகள் மையங்கள் தொடங்கப்பட வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதற்கேற்றவாறு தமிழக அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.*

திரு. மு. அப்பாவு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 கிலோ மீட்டர் தூரம் 25 குழந்தைகள், 1 கிலோ மீட்டர் தூரம் 5 குழந்தைகள் என்ற விகிதாச்சாரத்தில் இதே தெற்கு வள்ளியூரில் ஒரு மையமும், அதுபோல் இருக்கன்துறை பஞ்சாயத்திலே பெரியகுளம் என்ற இடத்திலும், கோட்டைக் கருங்குளம் பஞ்சாயத்திலே முத்தம்மாள்புரம் என்ற கிராமத்திலும், குமாரபுரம் பஞ்சாயத்திலே உபகாரமாதா குடியிருப்பு, நாலந்துளா, ராஜீவ் காந்தி நகர் ஆகிய இடங்களிலும் புதிய மையங்களை அமைத்துத் தர அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: *கண்டிப்பாக அரசு முன்வரும். ஏனென்றால் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி எந்தச் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதியாயினும் தேவையிருந்தால், விதிகளுக்கு உட்பட்டு இருந்தால் 3 மாதத்திற்குள் மையங்கள் திறக்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. நிச்சயமாக அரசு முன்வரும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.*

திரு. த-அ. மேகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், எனது காவேரிப்பட்டினம் தொகுதியில் உள்ள பல கிராமங்களில் அங்கன்வாடி மையம் அமைக்க ஏதுவாக இருந்தும் இதுநாள் வரை அங்கன்வாடி மையத்தை மாவட்ட நிருவாகம் அமைக்காமல் இருந்து வருகிறது. எனவே, எனது தொகுதியில் அங்கன்வாடி மையம் அமைக்க அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: நான் ஏற்கெனவே இதற்குண்டான பதிலை மிக விரிவாகக் கூறிவிட்டேன். நிச்சயமாக எந்தச் சட்டமன்ற உறுப்பினரும் கோரிக்கை வைத்தால் குழந்தைகள் மையம் உடனே தொடங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

28—

நிலம் கையகப்படுத்துதல்

***19456—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, காரைமேடு ஆதி திராவிட உயர்நிலைப் பள்ளிக்குத் தேவையான நிலத்தை கையகப்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சீர்காழி வட்டம், காரைமேடு கிராமத்தில் உள்ள ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டுவதற்கும், விளையாட்டு மைதானம் அமைப்பதற்கும் மற்றும் பாதை வசதி ஏற்படுத்தித் தருவதற்கும் தேவையான நிலத்தைக் கையகப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS